43

அனுப்புநர்
மாவட்ட ஆட்சித்தலைவர்
சென்னை மாவட்டம்,
சென்னை-600001.

பெறுநர்
அரசு முதன்மைச் செயலர்
தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும்
நகர்ப்புற வளர்ச்சி துறை
தலைமைச் செயலகம்,
சென்னை -9

ந.க.எண்.ப1/7081/2019, நாள்:09.06.2023

அம்மையீர்,

பொருள்: வீட்டு வாடகை ஒழுங்குபடுத்துதல் சட்டம் 2017 – சென்னை மாவட்டம் - வாடகை அலுவலர்கள் (Rent Authority) மாற்றம் செய்தது – சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு இணையவழி மனுக்களை செய்வது - தொடர்பாக.

பார்வை:
1) அரசு முதன்மைச் செயலர், தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை தலைமைச்செயலகம் கடித எண்.867/HB4/2019-1 நாள்.25.02.2019
2) இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.ப1/7081/2019 நாள்.26.03.2019
3) இதே எண்ணிட்ட இவ்வலுவலக குறிப்பு கோப்பு நாள்.06.05.2023
4) இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.ப1/7081/2019 நாள்.23.05.2023
5) தொடர்புடைய ஆவணங்கள்

*****

பார்வையில் காணும் கடிதங்களின் மீது தங்களின் கனிவான கவனம் வேண்டப்படுகிறது

சென்னை மாவட்ட வருவாய் அலகு வாடகைதாரர்கள் மற்றும் நில உடமைதாரர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் ஒழுங்குபடுத்துதல் சட்டம் (Tenancy Act-2017) 2019 முதல் அமல்படுத்தப்பட்டு, சென்னை மாவட்டத்தில் பார்வை 2-ல் கண்ட செயல்முறை ஆணையின்படி கீழ்க்கண்ட அலுவலர்கள் வாடகை அதிகார அலுவலர்களாக செயல்பட்டு வந்தனர்.

| வ.எண். | வாடகை அதிகார அலுவலர் | தொடர்புடைய வட்டங்கள் |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியர் (பொது) | மயிலாப்பூர் மற்றும் வேளச்சேரி வட்டங்கள் |
| 2. | வருவாய் கோட்டாட்சியர், வட சென்னை கோட்டம் | புரசைவாக்கம் மற்றும் தண்டையார்பேட்டை வட்டங்கள் |
| 3. | வருவாய் கோட்டாட்சியர், தென் சென்னை கோட்டம் | ஆலந்தூர் மற்றும் சோழிங்கநல்லூர் வட்டங்கள் |

| | | |
|---|---|---|
| 4. | வருவாய் கோட்டாட்சியர், மத்திய சென்னை கோட்டம் | அம்பத்தூர் மற்றும் மதுரவாயல் வட்டங்கள் |
| 5. | மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியர் (நிலம்) | மாதவரம் மற்றும் திருவொற்றியூர் வட்டங்கள் |
| 6. | தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) | மாம்பலம் மற்றும் கிண்டி வட்டங்கள் |
| 7. | மாவட்ட ஆய்வுக் குழும அலுவலர் | எழும்பூர் மற்றும் அமைந்தகரை வட்டங்கள் |
| 8. | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபாண்மையினர் நல அலுவலர் | பெரம்பூர் மற்றும் அயனாவரம் வட்டங்கள் |

இதனைத் தொடர்ந்து, நிர்வாக காரணங்களுக்காக பார்வை 4-ல் கண்ட செயல்முறை ஆணையில் கீழ்க்கண்ட அலுவலர்களை வாடகை அதிகார அலுவலர்களாக (Rent Authority) நியமனம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் பத்திரிக்கை செய்தியும் வெளியிடப்பட்டுள்ளது.

| வ. எண் | வாடகை அதிகார அலுவலர் பெயர் | முகவரி | வாடகை அதிகாரிக்கு ஒதுக்கப்பட்ட வட்டங்களின் விவரம் |
|---|---|---|---|
| 1 | வருவாய் கோட்டாட்சியர் / சார் ஆட்சியர், சென்னை வடக்கு கோட்டம் | காந்தி மெயின் ரொடு, புழல், சென்னை-600066 | வட சென்னை கோட்டத்திற்கு உட்பட்ட திருவொற்றியூர், பெரம்பூர், தண்டையார்பேட்டை, புரசைவாக்கம் மற்றும் மாதவரம் வட்டங்கள் |
| 2 | வருவாய் கோட்டாட்சியர் / சார் ஆட்சியர், சென்னை தெற்கு கோட்டம் | அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600032 | தென் சென்னை கோட்டத்திற்கு உட்பட்ட ஆலந்தூர், சோழிங்கநல்லூர், மயிலாப்பூர், கிண்டி வேளச்சேரி வட்டங்கள் |
| 3 | வருவாய் கோட்டாட்சியர் / சார் ஆட்சியர், சென்னை மத்திய கோட்டம் | அண்ணா நகர் (மேற்கு) விரிவு, திருமங்கலம், சென்னை-600101 | மத்திய சென்னை கோட்டத்திற்கு உட்பட்ட அம்பத்தூர், எழும்பூர், மாம்பலம், அமைந்தகரை, அயனாவரம், மதுரவாயல் வட்டங்கள் |

இந்நேர்வில் மேற்படி 8 வாடகை அதிகார அலுவலர்கள் தற்போது கோட்டம் வாரியாக 3 வாடகை அதிகார அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இணையத்தில்(Login) உள்ள மனுக்களை சம்மந்தப்பட்ட வாடகை அதிகார அலுவலர்களுக்கு மாற்றம் செய்திடவும், இனிவருங்காலங்களில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் இணையவழி மனுக்கள்

சம்மந்தப்பட்ட வாடகை அதிகார அலுவலர்களுக்கு சென்றடையும் வகையில் TNEGA மூலம் இணைய வழி மாறுதல்கள் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது

ஒம்/-சு.அமிர்த ஜோதி
மாவட்ட ஆட்சியர்
சென்னை

//உத்தரவின் படி//

மாவட்ட ஆட்சியரின்(பொது)
நேர்முக உதவியர்

நகல்

1) கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர்
வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம்
சேப்பாக்கம். சென்னை-5

2) மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை
சென்னை-5

3) இயக்குநர்
தமிழ்நாடு மின் ஆளுமை நிறுவனம்
807, 7வது தளம், செங்கல்வராயன் நாயக்கர் கட்டிடம்
அண்ணா சாலை, சென்னை-600002

4) மேலாளர்
மாவட்ட மின் ஆளுமை
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
சென்னை-1

5) வருவாய் கோட்டாட்சியர்கள்
(வடக்கு,தெற்கு,மத்தியம்)
சென்னை மாவட்டம்